# மனனப் பகுதி - தரம் 8

## திருவிவிலியப் பகுதி

1. ஆண்டவரது உடன்படிக்கையையும் ஒழுங்குமுறையையும் கடைப்பிடிப்போருக்கு, அவருடைய பாதைகளெல்லாம் பேரன்பும் உண்மையும் உள்ளனவாய் விளங்கும். (திருப்பாடல் 25:10)

2. உமது அரசு எல்லாக் காலங்களிலுமுள்ள அரசு, உமது ஆளுகை தலைமுறை தலைமுறையாக உள்ளது. (திருப்பாடல் 145:13)

3. ஆண்டவரை நான் எக்காலமும் போற்றுவேன், அவரது புகழ் எப்பொழுதும் என் நாவில் ஒலிக்கும். (திருப்பாடல் 34:1)

4. ஆனால், காலம் நிறைவேறியபோது திருச்சட்டத்திற்கு உட்பட்டிருந்த நம்மை மீட்டுத் தம் பிள்ளைகள் ஆக்குமாறு கடவுள் தம் மகனைப் பெண்ணிடம் பிறந்தவராகவும் திருச்சட்டத்திற்கு உட்பட்டவராகவும் அனுப்பினார். (கலாத்தியர் 4:4,5)

5. இதோ! கன்னி கருவுற்று ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பார். அக்குழந்தைக்கு இம்மானுவேல் எனப் பெயரிடுவர்" (மத்தேயு 1:22–23)

6. இருவரும் ஒரே உடலாய் இருப்பர். இனி அவர்கள் இருவர் அல்ல ஒரே உடல். எனவே, கடவுள் இணைத்ததை மனிதர் பிரிக்காதிருக்கட்டும்." (மத்தேயு 19:5–6)

7. திருமணமான ஆண்களே, கிறிஸ்து திருச்சபைமீது அன்பு செலுத்தியது போல நீங்களும் உங்கள் மனைவியரிடம் அன்பு செலுத்துங்கள். ஏனெனில் ,கிறிஸ்து திருச்சபைமீது அன்பு செலுத்தி, அதற்காகத் தம்மையே ஒப்புவித்தார். (எபேசியர் 5:25)

8. 'ஆண்டவரின் பேரன்பு முடிவுறவில்லை! அவரது இரக்கம் தீர்ந்து போகவில்லை (புலம்பல் 3:22)

## திருத்தூதர் நம்பிக்கை அறிக்கை

9. அவருடைய ஒரே மகனாகிய இயேசு கிறிஸ்துவையும் நம்புகிறேன். பகுதி – (2)

10. இவர் தூய ஆவியாரால் கருவுற்று தூய கன்னிமரியாவிடமிருந்து பிறந்தார். பகுதி – (3)